# தோமா கிறிஸ்தவம்

வரலாற்றுப் பிளவுக்கோடு அம்பலமாகிறது
(A Historical Faultline Exposed)

ஆர். பாலா

RP
REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்

**தோமா கிறிஸ்தவம்**

**வரலாற்றுப் பிளவுக்கோடு அம்பலமாகிறது**

**(A Historical Faultline Exposed)**

*© ஆர். பாலா*

*முதல் பதிப்பு: ஜூலை 2023*

*இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வேத வசனங்கள் அனைத்தும் இந்திய வேதாகம சங்கம் வெளியிட்டிருக்கும் பழைய திருப்புதல் (OV) பரிசுத்த வேதாகமத்தில் இருந்து பெறப்பட்டவை.*

*இந்நூலின் சகல உரிமைகளும் ஆசிரியருக்குரியது. இந்நூலின் எந்தப் பகுதியையும், எந்தவிதத்திலும் ஆசிரியரின் எழுத்துபூர்வ முன் அனுமதியின்றி மறுபதிப்பு செய்வதற்கு அனுமதியில்லை. விமர்சனத்திற்காகவோ, விரிவுரைகளில் குறிப்பிடவோ, பிரசங்கத்தில் பயன்படுத்தவோ, ஆய்வுகளுக்காகவோ குறிப்பிட்ட சிறு பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எல்லாத் தேவைகளுக்கும் கீழ் வரும் பதிப்பகத்தாரின் முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.*

***சீர்திருத்த வெளியீடுகள்***

*தொலைபேசி:* +91 9445671113

*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.me *வலைப்பூவைப் பார்க்கவும்.*

# பதிப்புரை

இந்து மதத்தில் இயேசுவா! எனும் நூலை ஜூன் மாதம் 2000ல் நியூசிலாந்தில் வெளியிட்டிருந்தேன். அது இன்று அச்சில் இல்லை. இப்போது "தோமா கிறிஸ்தவம்", எனும் இப்புதிய நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முன்பு, 2000ல் வெளியிடப்பட்ட நூலைவிடப் பன்மடங்கு புதிய அம்சங்களையும், ஆய்வுகளையும் சுமந்து இந்நூல் வெளிவருகிறது. மெய் கிறிஸ்தவர்களும், திருச்சபைகளும் வேதத்தில் நல்லறிவு கொண்டிருக்கும் அதேவேளை, வேதத்திற்கும், கிறிஸ்துவுக்கும் எதிரியாக முளைக்கும் அத்தனை ஆபத்துக்களையும் இனங்கண்டு கொள்ளக்கூடிய நிதானத்தையும் கொண்டிருக்க வேண்டும். போலிப்போதனைகளுக்கு இதயத்தில் இடங்கொடுப்பது நம்முடைய கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு ஆபத்தை விளைவிக்கும். அந்த ஆபத்தில் இருந்து கிறிஸ்தவர்களையும், திருச்சபைகளையும் காக்கும் ஒரே காரணத்திற்காகவே இப்புதிய நூல் வெளிவருகிறது.

பிரசங்கிகளும், இறையியல் மாணவர்களும் இதைப் பயன்படுத்தி நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். முக்கியமாக நம்மினத்தில் இறையியல் கல்லூரிகளிலேயே போலிப்போதனைகள் இலகுவாக இடம்பிடித்து மாணவர்களைக் கபளீகரம் செய்வதால் இறையியல் மாணவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இந்நூல் துணை செய்யும்.

வேத சத்தியங்களை மட்டும் நம்பி விசுவாசிக்க வேண்டியதும், பகிர்ந்துகொள்ள வேண்டியதும் கிறிஸ்தவர்களின் கடமை; கிறிஸ்தவ விசுவாசம் அதை மட்டுமே செய்யும். வேதம்

மட்டுமே கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது; கிறிஸ்தவ வாழ்விற்கு அவசியமான அனைத்துப் போதனைகளையும் தருகிறது. இந்தக் காரணத்தினால்தான் சீர்திருத்தவாதிகள், “வேதம் மட்டுமே” என்று முழங்கினார்கள். இந்த நம்பிக்கையைக் கொண்டிராது இயேசு கிறிஸ்துவை இந்து மதத்தின் வேதங்களிலும், இதிகாசங்களிலும், சாஸ்திரங்களிலும் இருந்து பிரசங்கிப்பவர்கள் கிறிஸ்துவுக்கும், வேதத்திற்கும் எதிரிகள். அவர்களை இனங்காட்டுவது மட்டுமல்லாமல், அவர்களுடைய வாதங்களை சத்திய வேதத்தின் மூலம் எதிர்கொண்டு பதிலளிக்கிறது இந்நூல்.

கிறிஸ்தவரல்லாதவர்கள் நம்மினத்தில் இன்று கிறிஸ்தவத்தை ஊன்றிக் கவனிக்கிறார்கள். அதற்குக் காரணம் இயேசுவில் ஏற்பட்டிருக்கும் ஆர்வம் அல்ல; கிறிஸ்தவ பிரசங்கிகள் என்ற பெயரில் சிலர் செய்து வரும் அட்டகாசந்தான். அது கிறிஸ்தவத்திற்கெதிராக அவர்களைப் போர்க்கொடி எழுப்பச் செய்திருக்கிறது. அதையும் இந்நூலில் விளக்கி அவர்களுக்குப் பதிலளித்திருக்கிறேன்.

இந்நூலை வெளியிட, அது பற்றி என்னோடு ஓரிரு தடவைகள் கலந்துரையாடி என்னை ஊக்குவித்திருக்கும் எல்டன் ஜோனுக்கும், ஜெபித்தும், ஊக்குவித்தும் எனக்கு உதவி வரும் என் சபை மக்களுக்கும் என் நன்றிகள்.

இந்நூலைத் தயாரித்து, அட்டைப் படத்தை தயாரித்து, அச்சுக்குப் போகும்வரை எனக்குத் துணைபுரிந்திருக்கும், நண்பர் ஜேம்ஸுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பணியில் அவர் ஆர்வத்தோடு தொடர்ந்து உழைத்து வருகிறார். பிழைதிருத்தங்களைச் செய்யத் துணையாயிருந்த பாலசுப்பிரமணியத்திற்கும், ரோசலினுக்கும் என் நன்றிகள்.

தமிழ் கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய வழிகாட்டியாக இருக்கவும், ஆவிக்குரிய ஆபத்துகளில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும் கர்த்தர் இந்நூலைப் பயன்படுத்த ஜெபத்தோடு இதைச் சீர்திருத்த வெளியீடுகள் மூலமாக வெளியிடுகிறோம்.

பதிப்பாசிரியர்
**2023**

# பொருளடக்கம்


1. ஏன் இந்த நூல்? ....................................................................7
2. தற்காலத் தமிழ் கிறிஸ்தவம் ................................................15
3. சாது செல்லப்பாவும் அவரது வழித்தோன்றல்களும்.......25
4. தோமாவும் கிறிஸ்தவமும்..................................................43
5. திருவள்ளுவரும் திருக்குறளும்...........................................75
6. திராவிட சமயங்கள் ...............................................................85
7. மு. தெய்வநாயகத்தின் தவறான வேத விளக்கங்கள்........91
8. இந்து மதத்தில் கிறிஸ்தவம்..............................................121
9. உடைகிறதா இந்தியா? ......................................................139
10. ஜெயமோகனின் பார்வையில் சிலுவை ..........................165
11. தனித்துவமுள்ள கிறிஸ்தவம் ...........................................185

# 1

# ஏன் இந்த நூல்?

"இந்திய வேதங்களில் இயேசுவா!" என்ற தலைப்பில் 2000ம் ஆண்டில் நான் வெளியிட்ட நூலை அனுப்பி வைக்குமாறு கடந்த சில வருடங்களில் என்னைக் கேட்டவர்கள் உண்டு. அந்நூல் நியூசிலாந்தில் வெளியிடப்பட்டு பலருக்கும் அன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இன்று அது அச்சில் இல்லை. அந்நூலை ஏன் ஆர்வத்தோடு கேட்கிறார்கள் என்பதற்கான காரணத்தை ஆராய்ந்தபோது, இந்து மதத்தில் கிறிஸ்துவைக் கண்டுகொள்ளலாம் என்ற போதனை மறுபடியும் தலைதூக்கிப் பல வர்ணப் பட்டாம் பூச்சியைப்போலத் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவியிருப்பதை உணர்ந்தவர்கள் அதுபற்றி அறிந்துகொள்ளத் துடிக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

இதற்கு முன் வெளிவந்த நூல் அன்றைய காலகட்டத் தேவையைச் சந்திப்பதற்காகவும், முக்கியமாகத் தமிழகத்தைச் சேர்ந்த சாது செல்லப்பா, டாக்டர் மு. தெய்வநாயகம் ஆகியோரின் விளக்கங்கள் எத்தனை தவறானவை என்பதை சுருக்கமாக அறிமுகப்படுத்தவுமே வெளியிடப்பட்டது.

சாது செல்லப்பா தன் போதனைகளைச் சிறு, சிறு நூல்களாக வெளியிட்டிருக்கிறார்; அவர் பெரும்பாலும் அவற்றை ஆடியோ செய்திகளாகத் தந்திருக்கிறார். சாது செல்லப்பா மறைந்துவிட்டபோதும் அவருடைய போதனைகளுக்கு

உயிரளித்து பரப்பி வருகிறவர்கள் இன்றிருக்கிறார்கள். மு. தெய்வநாயகம் தன் ஆய்வுகளை நீண்ட நூல்களாகப் படைத்திருக்கிறார். அவருடைய இரண்டு முக்கிய நூல்களை அடிப்படையாக வைத்தே அவருடைய விளக்கங்களுக்கு 2000ல் வெளிவந்த நூலில் நான் எதிர்வினையளித்திருந்தேன்.

இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட என் நூல் இன்றும் ஓரளவுக்குப் பயனுள்ளதாக இருந்தபோதும், மேலதிகமான விளக்கங்கள் அவசியம் என்றும், இந்த இடைப்பட்ட காலங்களில் நம்மினத்தில் நிகழ்ந்திருக்கும் அநேக மாற்றங்களை அறிமுகப்படுத்தி அவற்றிற்கான விளக்கங்களையும் தரவேண்டியது காலத்தின் நிர்ப்பந்தம் என்பதையும் உணர்ந்தேன். மேலும் மு. தெய்வநாயகத்தின் பிரச்சாரம் இடைப்பட்ட காலங்களில் இன்னுமொருபடி மேலே போயிருப்பதால் அவருடைய புதிய அவதாரத்திற்கான காரணத்தைத் தோலுரித்துக் காட்டவேண்டியதும் அவசியம் என்று உணர்ந்தேன். மு. தெய்வநாயகமும் அவரைச் சார்ந்தவர்களும் செய்து வரும் போலித்தனங்கள் இந்துக்களுக்கும், இந்துத்துவா பித்தர்களுக்கும் கிறிஸ்தவர்கள் மேல் பெரும் ஆத்திரத்தை உண்டாக்கியிருப்பதையும் அறியாமல் இருக்கமுடியாது. அதன் விளைவுகளில் ஒன்றே இந்தியாவில் கிறிஸ்தவப் பணிகளைத் தாக்கி எழுதப்பட்டிருக்கும் “உடையும் இந்தியா” என்ற முக்கியமான நூல். இந்நூல் பற்றிய விபரங்களை ஒரு அதிகாரத்தில் விளக்கிப் பதிலளித்திருக்கிறேன்.

இன்றைய தலைமுறை இளம் வாலிபர்களில் ஒரு சிலரே இப்புதிய நூலை வெளியிடக் காரணமாக இருந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் ஆணிவேரையே சிதைக்கும் இந்த விஷப்பூச்சி போன்ற போதனை பல இடங்களில் தமிழகத்தில் பிரசங்க மேடைகள் மூலமும், சமூக வலைதளங்களின் மூலமும் பரவிவருவதை அறிந்து அதற்கான விளக்கங்களை அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அசத்தியம் தலைதூக்கும்போது ஆர்வக்கோளாறில் அதற்கு உடனடியாகத் தலைவணங்கி விடாமல் ஆராய்ந்து பார்க்கும் இருதயத்தைக் கொண்டிருக்கும் அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த விஷப்பூச்சி மறுபடியும் பரவ ஆரம்பித்திருக்கிறது

என்பதை என் கவனத்திற்குக் கொண்டு வந்த அவர்களுக்கு என் நன்றிகள்.

இப்புதிய நூல் மூன்று முக்கிய ஆளுமைகளை உங்கள் முன் நிறுத்துகிறது. அவர்கள்: சாது செல்லப்பா, மு. தெய்வநாயகம், ஜெயமோகன். இவர்கள் மத்தியில் என்ன ஒற்றுமை காணப்படுகிறது என்று கேட்கிறீர்களா? மூவரும் ஏதோவொரு விதத்தில் இயேசு கிறிஸ்துவோடு தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளுகிறார்கள். இன்னொரு விதத்தில் சொல்லப்போனால், இவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சுய நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். சாது செல்லப்பாவுக்கு, இந்து வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் இந்துக்கள் கிறிஸ்துவை அறியவைப்பது அடிப்படை இலக்காக இருந்து வந்தது. மு. தெய்வநாயகம், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு தோமா வழிவந்த ஆதிக் கிறிஸ்தவமான திராவிடர் (தமிழர்) சமயம் தமிழகத்தில் இருந்ததாக விளக்கித் தன்னுடைய தீவிர திராவிட இன, அரசியல் நோக்கங்களுக்காகக் கிறிஸ்துவைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்.

ஜெயமோகன், மேல் குறிப்பிட்ட இருவருடைய நோக்கங்களையும் கொண்டிராது, தனிப்பட்ட மன அமைதிக்காக கிறிஸ்துவை ஒரு மாபெரும் ஞானியாக மட்டும் கருதி, சுயமுயற்சியால் அவரைத் தனக்குள்ளாகவே கண்டுகொள்ளும் "ஞானமார்க்க" முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இந்த விதங்களிலேயே இவர்கள் மூவரும் கிறிஸ்துவோடு தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளுகிறார்கள். இவர்கள் மூவருக்கும் வேறெதிலும் ஒற்றுமையில்லை. ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்! என்னைப் பொறுத்தவரையில் இவர்களில் எவருமே வேதம் விளக்கும் மெய் கிறிஸ்தவ அனுபவத்தில் தெளிவுள்ளவர்களாகத் தெரியவில்லை. ஜெயமோகன் நிச்சயமாக கிறிஸ்தவ அனுபவத்தை அடையவில்லை; அவரும் அப்படி அறிவித்ததில்லை. ஏனைய இருவருடைய கிறிஸ்தவ அனுபவங்கள் பெருங் கேள்விக்குரியதாக இருக்கின்றன. அதிர்ச்சியாக இருக்கிறதா? இந்நூலைப் பொறுமையாக வாசித்துப் பாருங்கள். உங்களுக்கு பதில் கிடைக்கும்.

சாது செல்லப்பா, இந்திய வேதங்களையும், மந்திரங்களையும்,

சைவ சித்தாந்தம் மற்றும் சித்தர் பாடல்களையும் பயன்படுத்தி இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் திரிபுவாத சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். இந்து மதச் சிலைகளில் இருந்து, அவர்களுடைய வழிபாட்டுப் பண்பாடுகள் அனைத்திற்கும் அவர் கிறிஸ்தவ விளக்கமளித்தார். அடிப்படையில் கிறிஸ்தவத்தில் இருந்து தோன்றியதே இந்து மதம் என்பது அவருடைய போதனை. அவருக்கு கிறிஸ்தவ வேதத்தில் ஆழமான அறிவோ திருச்சபைத் தொடர்போ இருக்கவில்லை. இவர் பிரசங்கித்த சுவிசேஷம், கலாத்தியர் 1:8ல் பவுல் கூறியதுபோல் "வேறொரு சுவிசேஷம்." கிறிஸ்தவ வேதத்தின் அதிகாரத்தைப் பற்றிய துளியளவு நம்பிக்கையும் இவருக்கு இருந்திருப்பதாகத் தெரியவில்லை. இவருடைய கிறிஸ்தவ அனுபவமும், சாட்சியும் பெருங் கேள்விக்குரியன. சத்தியத்திற்கு அதிகம் மதிப்பளிக்காது உணர்ச்சிகளுக்கு மட்டுமே தூபமிடும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் சபைகள், குழுக்கள் மற்றும் தாராளவாத சபைகள் (Liberal denominations) மத்தியிலேயே இவருக்கு எப்போதும் வரவேற்பிருந்திருக்கிறது.

மு. தெய்வநாயகம், ஒரு காலத்தில் தென்னிந்திய திருச்சபையோடு தொடர்பு வைத்திருந்து, பின்பு தன்னை முழுமையாகத் திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கும், அரசியலுக்கும் அர்ப்பணித்துக்கொண்டவர். இவருக்கும் கிறிஸ்தவ வேதத்திலும், இறையியலிலும் ஆழமான அறிவில்லை. இவர் சாது செல்லப்பாவைப் போலத் தன்னையொரு சுவிசேஷகராகக் காட்டிக்கொள்ளாமல், திராவிட இயக்கப் பிரச்சாரகராகவே இனங்காட்டிக் கொள்ளுகிறார். திராவிட இயக்க இலட்சியங்களும், அடிப்படை நோக்கங்களுமே இவருக்கு "ஆன்மீகமாக" இருந்துவருகிறது. இவருக்கிருக்கும் தாராளவாத நம்பிக்கையும், இனப்பற்றின் அடிப்படையிலான சமயசமரச சித்துவேலையும், இவரது கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றிய பெருங் கேள்வியை எழுப்புகிறது.

ஜெயமோகன் இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர். அவர் ஒரு படைப்பாளி; இலக்கியவாதி. இந்துவாக இருந்தபோதும் கிறிஸ்துவை மதிக்கிறவர். தென்னிந்திய நாகர்கோவிலைச் சேர்ந்தவராகையால் கிறிஸ்தவ சூழலில் வளர்ந்தவர்; பல

கிறிஸ்தவ நண்பர்களைக் கொண்டிருக்கிறவர். மதத்தைவிட ஆன்மீகத்தில் அவருக்கு ஆர்வம் அதிகம். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய இவருடைய கணிப்பை இவரெழுதிய நூலான "சிலுவையின் பார்வை" விளக்குகிறது. அந்தக் கணிப்பின் தடுமாற்றத்தை இந்நூலின் ஓரத்தியாயத்தில் விளக்கியிருக்கிறேன்.

இன்னொன்றையும் இந்நூலில் நீங்கள் கவனிக்கவேண்டும். சாது செல்லப்பாவும், மு. தெய்வநாயகமும் அவரைச் சார்ந்தவர்களும் தங்களை ஏதோவொருவிதத்தில் கிறிஸ்தவர்களாக அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள். இன்னொருவிதத்தில் சொல்லப்போனால், கிறிஸ்தவப் போர்வைக்குள் தங்களை மறைத்துக்கொண்டு கிறிஸ்தவத்திற்கு ஆபத்து விளைவிக்கிறார்கள். ஆனால், ராஜீவ் மல்கோத்ராவும், அரவிந்தன் நீலகண்டனும், ஜெயமோகனும் கிறிஸ்தவர்கள் அல்ல. இந்து மதத்தைச் சார்ந்த அவர்கள் தங்கள் போக்கில், தங்களுடைய தவறான கிறிஸ்தவக் கண்ணோட்டத்தை நாமறியும்படிச் செய்திருக்கிறார்கள்.

இந்நூலில் பதினோரு அதிகாரங்கள் காணப்படுகின்றன. இம் முதலாம் அதிகாரம், ஒரு வரைபடத்தைப்போல நூலின் உள்ளடக்கத்தை அறிமுகப்படுத்துகிறது. அதையடுத்து வரும் அதிகாரம் தமிழகத்தில் கிறிஸ்தவத்தின் தற்போதைய ஆத்மீக நிலையைப் படம் பிடித்துக்காட்டுகிறது. மூன்றாம் அதிகாரம், சாது செல்லப்பாவின் போதனைகளையும், நோக்கங்களையும் உங்கள் முன் படமாக விரித்து வைக்கின்றது. ஐந்தாம் அதிகாரம், தோமா இந்தியா வந்தாரா? என்ற மிக அவசியமான கேள்விக்குப் பதிலளிக்க முனைகிறது. அடுத்து வரும் மூன்று அதிகாரங்களும் (6, 7, 8) மு. தெய்வநாயகத்தின் போதனைகளை விளக்கும் இரண்டு முக்கியமான நூல்களின் நீண்ட விளக்கமாகக் காணப்படுகின்றன. ஒன்பதாம் அதிகாரம், கிறிஸ்தவத்தின் மீது போர்க்குரலெழுப்பும் "உடையும் இந்தியா" நூலின் இந்துத்துவக் கண்ணோட்டத்தை அலசி அதற்குப் பதிலளிக்கிறது. பத்தாம் அதிகாரம், ஜெயமோகனின் "சிலுவையின் பார்வையில்" என்ற நூலின் விமர்சனமாகவும், அதற்குப் பதிலாகவும் அமைந்திருக்கிறது. பதினோராம் அதிகாரம், கிறிஸ்தவத்தின் தனித்துவத்தை விளக்கும் அவசியமான இறுதி ஆக்கமாக அமைந்திருக்கின்றது.

*இந்திய வேதங்களில் இயேசுவைக் காணும் முயற்சி இன்று நேற்றில்லாமல் 19ம் நூற்றாண்டிலேயே இருந்திருக்கிறது. சமீபத்தில் நான் இணையத்தில் வாசித்த, நியூயோர்க்கில் வெளியிடப்பட்ட இதுபற்றிய ஒரு ஆங்கிலப் படைப்பு 1892ல் வெளிவந்திருக்கிறது. இதன் ஆசிரியர் பெயர் தரப்படவில்லை. இந்தியாவைச் சேர்ந்த ஒரு அருட்பணியாளர் எழுதியது என்று மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.* (Jesus in the Vedas or The testimony of Hindu Scriptures in Corroboration of the Rudiments of Christian doctrine by a Native Indian Missionary, published by Funk & Wagnalls Company, New York 1892). *இந்நூலில் ஆணித்தரமாக, இந்திய வேதங்கள் கூறும் பிரஜாபதி இயேசு கிறிஸ்துவே என்றும், ஒரு இந்தியன் மெய்யான இந்தியனாக இருக்கவேண்டுமானால் அவன் கிறிஸ்தவனாக இருந்தாக வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தோடு, "இந்திய வேதங்களுக்கும், கிறிஸ்தவ வேதத்திற்கும் பிரிக்கமுடியாதபடி நெருக்கம் காணப்படுவதால் அதில் ஒன்றை வாசிக்கும்போது மற்றதை நோக்கிப் போகாமல் இருக்கமுடியாது; அதையும்விட அவற்றில் ஒன்றை உறுதியாகப் பற்றிக்கொண்டு மற்றதின் போதனைகளை நிராகரிக்கவும் முடியாது" என்று இந்நூல் அடித்துச் சொல்லுகிறது. இந்நூலில் காணப்படும் அதே வாதத்தைத்தான் சாது செல்லப்பா தனது சொந்தக் கண்டுபிடிப்புப் போல் நம்முன் வைத்துச் சென்றிருக்கிறார். அதைத் தமிழகத்திற்கு ஏற்ற முறையில் வடிவமைத்து டாக்டர் மு. தெய்வநாயகம் தன் நூல்களில் தந்திருக்கிறார்.*

*ரேய்மொன் பணிக்கர்* (Raimon Panikkar) *எனும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்க யேசுவிஸ்ட் பிரிவைச் சேர்ந்த பாதிரியார்,* The Unknown Christ of Hinduism *(இந்து மதத்தில் காணப்படும் அறியப்படாத கடவுள்) எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலும் மேலே நான் குறிப்பிட்டிருக்கும் நூலின் கருப்பொருளின் அடிப்படையில் இந்திய வேதங்களில் காணப்படும் பிரஜாபதி இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது என்ற வாதத்தை முன்வைக்கிறது. இந்திய வேதங்களில் "அறியப்படாத தேவனாக" பிரஜாபதி என்ற பதத்தின் மூலம் விளக்கப்பட்டிருக்கிறவர் இயேசுவே என்கிறார் பணிக்கர்.*

"பணிக்கரே கிறிஸ்தவம் ஏனைய மதங்களோடு சமரசப் பேச்சில் ஈடுபடுவதற்கு அடித்தளம் நாட்டியவர்" என்று கலிபோர்னிய மாநிலத்து பல்கலைக்கழகத்தின் தத்துவப் பேராசிரியரான ஜோசப் பிரபு நியூயோர்க் டைம்ஸ் என்ற பிரபல பத்திரிகைக்குக் கொடுத்த தொலைபேசி சம்பாஷனையில் சொல்லியிருக்கிறார் (Prabhu, "Raimon Panikkar, 'Apostle of Inter-faith dialogue,' dies"). ஆகவே, சாது செல்லப்பா மற்றும் மு. தெய்வநாயகம் போன்றோரின் போதனைகள் அவர்களுடைய சொந்தக் கண்டுபிடிப்புகள் அல்ல என்பதையும், ஏற்கனவே கத்தோலிக்கர்கள் மூலம் இந்தியாவுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருந்தவற்றிற்கே இவர்கள் புத்துருவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. அதேவேளை, சுவிசேஷ கிறிஸ்தவர்களாகத் தங்களை அறிமுகம் செய்துகொள்கிற இவர்கள் கிறிஸ்தவ வேதத்தோடு தொடர்பில்லாத கத்தோலிக்க மதக் கட்டுக்கதைகளுக்கு புத்துருவம் கொடுத்திருப்பது ஏன்? என்ற கேள்வியும் எழுகிறது.

இதுவரை பார்த்தவற்றிலிருந்து கத்தோலிக்கர்கள் இந்து மதத்தைக் கிறிஸ்தவத்தோடு இணைத்துக் காட்டும் சமயசமரச முயற்சியில் (Religious Syncretism) அதிகம் அக்கறைகாட்டியிருக்கிறார்கள் என்பதும் தெளிவு. கிறிஸ்தவ வேதத்தைப் பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் வாசிக்க முடியாதபடி செய்திருந்த கத்தோலிக்க மதம் கிறிஸ்தவ வேதத்தின் அதிகாரத்தை அடியோடு ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரு மதம் என்பதை கிறிஸ்தவ வரலாறும், கத்தோலிக்க மதத்தின் நம்பிக்கைகளுமே வெளிப்படையாக விளக்குகின்றன. அதனால் அம்மதத்தவர்கள் சமயசமரச வித்தைகளில் ஈடுபட்டு வந்திருப்பது ஆச்சரியமானதல்ல!

இந்திய வேதங்களில் இயேசுவைக் கண்டுகொள்ளலாம் என்ற போதனை கவர்ச்சிகரமாக இருந்தபோதும், கிறிஸ்தவ வேதத்தை அடியோடு நிந்தனை செய்வதாக இருக்கிறது. கிறிஸ்தவ வேதத்தின் மெய்த்தன்மையை உணர்ந்தவர்களால் மட்டுமே நான் சொல்வதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும். இந்திய வேதங்களையும், சாஸ்திரங்களையும், இலக்கியங்களையும் கிறிஸ்தவ வேதத்தோடு இணைக்க முயல்வது சாத்தானைத் தவிர வேறு எவருக்கும் மகிழ்ச்சியளிக்காது.

கிறிஸ்தவ வேதத்திற்கெதிராகச் செயல்படுவதும், அதை அழிக்க முயல்வதுமே சாத்தானின் வாழ்க்கை இலட்சியம். அதைத்தான் அவன் ஏதேன் தோட்டத்தில் வெற்றிகரமாகச் செய்து ஆதாம், ஏவாளை வஞ்சித்துப் பாவம் செய்யவைத்தான். சாத்தானின் கையாட்களாக இந்தியாவில் செயல்பட்டு வருகிறவர்கள் அதையே இந்திய வேதங்களில் இயேசுவைக் கண்டுகொள்ளலாம் என்ற போதனையின் மூலம் ஆத்துமாக்களையும், சபைகளையும் வஞ்சித்து வருகிறார்கள். சாத்தானின் இந்தச் சூழ்ச்சிக்கு நீங்கள் பலியாகிவிடாமல் இருக்க இந்நூல் துணைபுரியுமானால் அதுவே இந்நூலுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாக அமையும். இந்த விஷப்பூச்சியான போதனைக்கு நீங்கள் தப்பினால் மட்டும் போதாது; அதற்கும் ஒருபடி மேல் போய் வேதத்தின் அதிகாரத்தில் மட்டும் நம்பிக்கை வைத்து, வேதம் விளக்கும் சுவிசேஷத்திலும், அது வெளிப்படுத்தும் கிறிஸ்துவிலும் மட்டுமே விசுவாசத்தைக்கொண்டு நீங்கள் வாழ வேண்டியது அவசியம். அதற்கு கர்த்தர் உங்களுக்குத் துணைபுரியட்டும்.

# 2

# தற்காலத் தமிழ் கிறிஸ்தவம்

திராவிட சமயங்கள் ஆதியில் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் வளர்ந்த சமயங்களா? இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்துவை நாம் காண முடிகிறதா? இத்தகைய கேள்விகளை நாம் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இன்று சிலர் ஏற்படுத்தியுள்ளார்கள். கிறிஸ்தவம்தான் திராவிட சமயமாக தமிழகத்தின் பண்பாட்டிற்கு ஏற்ப எழுந்த சமயம் என்று சிலரும், இந்திய வேதங்கள் இயேசுவைத்தான் கடவுளாகக் காட்டுகின்றன என்று வேறு சிலரும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இப்போதனைகள் இன்று தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீ லங்கா போன்ற நாடுகளில் பரவியிருப்பதைப் பார்க்க முடிகின்றது. அதுமட்டுமல்லாமல் தமிழ் கிறிஸ்தவர்கள் வாழும் மேலைத்தேய நாடுகளுக்கும் இப்போதனை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்விருவகைப் போதனைகளும் இருவேறு முக்கிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

கிறிஸ்தவமும், திராவிட சமயங்களும் ஒன்றே என்று போதிப்பவர்கள் திராவிட இயக்கங்களைச் சேர்ந்த தீவிர ஆரிய, பிராமண எதிர்ப்பாளர்கள். இவர்களது நோக்கம் தமிழர்கள் மத்தியில் ஆரிய, பிராமண ஆதிக்கத்தை இல்லாமலாக்குவதே. இதற்கு கிறிஸ்தவத்தை ஒரு ஆயுதமாக இவர்கள் கையாள முனைகிறார்கள்.

இந்திய வேதங்களில் இயேசுவைக் காணலாம் என்று போதிப்பவர்கள் இந்துக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள இது ஒரு இலகுவான வழியாக இருக்கும் என்ற ஒரே நோக்கில் அதைப் போதித்து வருகிறார்கள். இவ்விருவகைக் கூட்டத்தாருக்கும் வெவ்வேறுவித நோக்கங்கள் இருந்த போதும், கிறிஸ்தவ வேதத்திற்குப் புறம்பாக உலக ஞானத்தின் அடிப்படையிலான போலியான ஒரு விளக்கத்தைக் கொடுப்பதில் மட்டும் ஒற்றுமை இருக்கின்றது.

## தமிழ் கிறிஸ்தவ உலகின் சிந்தனைப்போக்கு

இவ்விரு போதனைகளையும் ஆராயுமுன் இன்றைய தமிழ் கிறிஸ்தவ உலகின் பொதுவான சிந்தனைப்போக்கையும் நாம் ஓரளவு புரிந்து கொள்வது அவசியம். கிறிஸ்தவ வேதத்தில் மட்டுமல்ல, அந்நிய மதங்களிலும் இயேசுவைக் கண்டுகொள்ளலாம், அம்மதங்களை விட்டு விலக வேண்டிய அவசியமில்லை என்ற அளவிற்கு நிலைமை மாறியிருப்பதற்கு தமிழ் கிறிஸ்தவ உலகில் காணப்படும் இன்றைய பரவலான இறையியல் சிந்தனைப்போக்கே முக்கிய காரணமாக அமைகின்றது.

இன்று தமிழர்கள் மத்தியில் காணப்படும் கிறிஸ்தவத்தின் பெரும்பகுதி திருமறையாகிய வேதத்தின் அதிகாரத்தில் அடியோடு நம்பிக்கையற்றதாகக் காணப்படுகின்றது. இது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். உண்மைதான், கிறிஸ்தவ சபைகள் வேதத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன; கிறிஸ்தவர்கள் அதைக் கையில் வைத்திருக்கிறார்கள்; தேவைப்பட்டபோது வாசிக்கிறார்கள். இதை இல்லையென்று நான் மறுக்கவில்லை. வேதத்தை ஏதோவொருவிதத்தில் பயன்படுத்துவதற்கும், வேதத்தை ஆணித்தரமாக நம்பி விசுவாசிப்பதற்கும் இடையில் பெரிய வேறுபாடுண்டு. இதில் இரண்டாவதைத்தான் தமிழ் கிறிஸ்தவத்தில் காணமுடியவில்லை என்று சொன்னேன்.

வேதத்திற்கு வெளியில் உலக எழுத்துக்களில் இருந்தும், சுய அனுபவத்தின் மூலமும் சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும், வேதத்தின் மூலம் மட்டும் கர்த்தர் தன்னை வெளிப்படுத்தவில்லை என்ற அடிப்படைக் கோட்பாட்டைப் பின்பற்றி வரும்

கெரிஸ்மெட்டிக், பெந்தகொஸ்தே சபைகளுக்கும், தனிநபர் ஊழியங்களுக்கும் தமிழர்கள் மத்தியில் குறைவேயில்லை. இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையில் அமையும் ஊழியங்கள் வேதத்திற்குப் புறத்தில் இருந்து வரும் கருத்துக்களை சத்தியமாக ஏற்றுக்கொள்ளுவதில் ஆச்சரியமில்லை. கெரிஸ்மெட்டிக், பெந்தகோஸ்தே குழுக்களைச் சாராதவர்களும், வேதத்தின் மெய்த்தன்மை பற்றிய அறிவையும், வேதத்தில் ஆழ்ந்த நுண்ணிய ஞானத்தையும் கொண்டிராதவர்களாக இருப்பதால் எதையும் சிந்தித்து ஆராயாமல் வரவேற்றுப் பின்பற்றுபவர்களாகவே இருக்கின்றனர். திருச்சபைப் போதகர்கள் மத்தியில் வேதஞானம் மிகக் குறைவாக இருப்பதையும், பிரசங்கங்கள், கதாகாலாட்சேபங்களைப் போலக் காதைக் குளிர வைப்பதில் மட்டுமே கவனம் செலுத்துவதையும் யாரால் மறுக்க முடியும்.

### தமிழ் கிறிஸ்தவ உலகில் “லிபரலிசம்” (தாராளவாதம்)

லிபரலிசம் என்பதைத் தமிழில் தாராளவாதம் என்று அழைக்கலாம். “லிபரல்” என்ற ஆங்கில வார்த்தைக்கு தாராளம் என்பது ஒரு பொருள். தாராளத்தை மையமாகக் கொண்ட போதனை தாராளவாதம். ஆனால், இந்த நேரடி மொழிபெயர்ப்பு இறையியல் கண்ணோட்டத்தில் லிபரலிசம் என்றால் என்ன என்பதைத் தெளிவாக விளக்கவில்லை. அதனால் அது என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தாராளவாதம் என்ற பதத்தை இறையியல் அடிப்படையில் மட்டுமே இங்கு நான் பயன்படுத்துகிறேன்.

1921 ம் ஆண்டில் அமெரிக்க சீர்திருத்த இறையியலறிஞரான கிரேச்சம் மேச்சன் “கிறிஸ்தவமும், லிபரலிசமும்” என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் அவர் தாராளவாதம் எவ்வாறு அமெரிக்க கிறிஸ்தவ உலகைப் பாதிக்கத் தொடங்கியுள்ளது என்று விளக்கியுள்ளார். இந்தத் தாராளவாதக் கோட்பாடுகளே தமிழ் உலகிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு இன்று கிறிஸ்தவ சபைகளையும், ஊழியங்களையும் பெருமளவிற்குப் பாதித்து வருகின்றது.

லிபரலிசத்திற்கு விளக்கம் கொடுக்கும் கிரேச்சம் மேச்சன்,

“லிபரலிசம், கிறிஸ்தவத்தின் பொதுவான அம்சங்களுக்கே நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும், அதன் விசேஷ அம்சங்களான கிறிஸ்துவைப்பற்றிய போதனை, அவரது மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் ஏற்படும் மீட்பு ஆகியவை தற்காலிகமான அடையாளங்களே என்றும் தெரிவிக்கின்றது. அதாவது, கிறிஸ்தவத்தின் விசேஷ தன்மைகளைப்பற்றி விஞ்ஞான ரிதியிலான எதிர்ப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால், அதன் பொதுவான அம்சங்கள் மட்டுமே கிறிஸ்தவத்தின் சாராம்சமாகக் கருதப்பட வேண்டுமென்று லிபரல் இறையியலாளன் கருதுகிறான்.” என்று கூறுகிறார்.

அத்தோடு, கிறிஸ்தவ வேதம் போதிக்கும் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் அனுபவம் மட்டுமே முக்கியமானது என்றும், அதன் வரலாற்று அம்சங்களைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது என்றும் தாராளவாதம் போதிக்கிறது. ஆகவே, தாராளவாதக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்களைப் பொறுத்தவரையில், எதைப் பற்றியும் வேதமளிக்கும் பொதுவான போதனைகள் மட்டுமே சத்தியம், அதன் ஏனைய போதனைகளைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை என்பதே அவர்களுடைய நம்பிக்கை. இதிலிருந்து வேதத்தைப்பற்றி வரலாற்றுக் கிறிஸ்தவம் கொண்டுள்ள நம்பிக்கைகளுக்கு அடிப்படையில் மாறான எண்ணங்களைத் தாராளவாதம் கொண்டுள்ளதை அறிந்து கொள்ளலாம்.

தாராளவாத இறையியல், வேதத்தைக் கர்த்தருடைய சர்வ அதிகாரம் கொண்ட ஒரே வெளிப்பாடாக ஏற்றுக்கொள்ள வில்லை. வேதத்தைக் குறைபாடற்ற, முற்றும் நிறைவான, எக்காலத்திற்கும் போதுமான தேவனுடைய வெளிப்பாடாகத் தாராளவாதக் கோட்பாடு கருதுவதில்லை. ஆகவே, கிறிஸ்தவத்தைப்பற்றிய அதன் அணுகுமுறையும் வரலாற்றுக் கிறிஸ்தவத்திற்கு மாறானதாக இருக்கின்றது. வேதம் போதிக்கும் கிறிஸ்தவ அனுபவத்தை ஏற்றுக்கொள்ளும் தாராளவாதம்,

அவ்வனுபவம் வேதம் போதிக்கும் வகையில் மட்டுமே அமையவேண்டும் என்பதை முற்றாக நிராகரிக்கின்றது. அதாவது, கிறிஸ்தவ அனுபவம்தான் முக்கியமே தவிர, ஒருவர் கிறிஸ்துவின் இறப்பைப்பற்றியும், உயிர்த்தெழுதலைப் பற்றியும் வேதம் போதிக்கும் அதே நம்பிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமில்லை என்பது தாராளவாதத்தின் போதனை.

இப்போதனையினால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை நாம் ஆராய வேண்டும். இதன் மூலம் வேதத்தின் மெய்த் தன்மையைத் தாராளவாதம் நிராகரிக்கின்றது; அதன் முழு அதிகாரத்தையும் அது ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்தவ அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் தாராளவாதம் தன்னைக் காட்டிக்கொண்டாலும், உண்மையில் அது ஒரு போலியான, வேதத்திற்கு மாறான ஒரு அனுபவத்தை கிறிஸ்தவத்தின் பெயரில் அறிமுகப்படுத்துகிறது. மெய்யான கிறிஸ்தவ அனுபவம், எப்போதும் வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் ஏற்படும் நம்பிக்கைகளின் அடிப்படையில் மட்டுமே அமையும். அதாவது, கிறிஸ்துவைப் பற்றி வேதம் போதிக்கும் சத்தியங்களுக்கு முரணான எந்த அனுபவமும் கிறிஸ்தவ அனுபவமாக இருக்க முடியாது. அனுபவத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து வேதத்தின் போதனைகளை நிராகரித்தால் அது சாத்தானின் வழிகளில் போவதற்கே துணைபுரியும். இதைத்தான் தாராளவாதம் செய்து வருகிறது.

கிறிஸ்தவ அனுபவம் பழைய, புதிய ஏற்பாட்டுப் போதனைகளின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். அவ்வனுபவத்தைக் கர்த்தர் தனது வார்த்தையைப் பயன்படுத்தி பரிசுத்த ஆவியின் மூலமாக மட்டுமே அளிக்கிறார். (ரோமர் 10). கர்த்தருடைய வார்த்தை மட்டுமே இரட்சிப்பைப் பற்றிய நற்செய்தியை அளிக்கிறது. அதனை வேறு எதன் மூலமும் பெற்றுக்கொள்ள முடியாது. அதுவும், ஆவியானவர் அந்நற்செய்தியையே நமது மனந்திரும்புதலுக்கேதுவாகப் பயன்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவ இரட்சிப்பின் அனுபவத்தை வேறு எதன் மூலமாகவும் அளிப்பதில்லை. வேதத்தின் அதிகாரத்திற்கெதிராகப்

பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் செயல்படுவதில்லை. வேதம் போதிக்கும் இச்சத்தியங்களுக்கெல்லாம் முரணான போதனைகளையே தாராளவாதம் அளிக்கின்றது.

இதற்கெல்லாம் காரணம், தாராளவாதம் வேதத்தில் எந்தக்குறைபாடோ, தவறோ இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான். வேதத்தில் கர்த்தரின் வார்த்தையோடு மனித சிந்தனைகளும் அடங்கிக் காணப்படுகின்றன என்கிறது தாராளவாதம். அதனால் மனித சிந்தனைப் போக்கின்படி வேதத்திற்குத் தவறான விளக்கமளிப்பதை அது தவறாகக் கருதுவ தில்லை. இதன் காரணமாகவே தாராளவாதம், படைப்பையும், செங்கடல் கர்த்தரின் அற்புதத்தால் பிரிந்ததென்பதையும், இயேசு பரிசுத்த ஆவியினால் மேரியின் வயிற்றில் பிறந்தார் என்பதையும், கிறிஸ்துவின் அற்புதங்களையும் ஏற்றுக்கொள்ள மறுத்து அந்நிகழ்வுகளுக்கெல்லாம் மறுபிறப்படையாத பாவமனிதன் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கத்தை மட்டும் அளிக்கிறது.

வேதத்தின் வரலாற்று அம்சங்கள் நம்பத்தகுத்த வகையில் இல்லையென்றும், நவீன விஞ்ஞான ஆய்வுமுறைகளுக்கு அவை முரணானவையாக இருக்கின்றன என்ற அவிசுவாச எண்ணத்தினாலும் அவற்றை உவமைகளாகக் கருதி விளக்கங் கொடுக்க முயல்கிறது தாராளவாதம். வேதம், நாம் நம்பிக் கடைப்பிடிக்க வேண்டிய தவறிழைக்கவியலாத கர்த்தரின் கட்டளைவிதி என்ற எண்ணமே தாராளவாதக் கோட்பாட்டாள னிடத்தில் இல்லை. இதனால், தாராளவாத இறையியலாளன் கிறிஸ்துவையும், மனிதனையும், பாவத்தையும், வேதத்தின் ஏனைய சத்தியங்களையும் எப்போதும் சந்தேகக் கண்களுடனேயே ஆராய்கிறான். தாராளவாத இறையியலாளனுடைய அடிப்படை அணுகுமுறையே தவறானதாக இருப்பதால் அவனைப் பொறுத்தவரை வேதத்தை சந்தேகிப்பது அவனுக்குப் பாதகமாகப்படவில்லை.

## இறையியல் கல்லூரிகளில் தாராளவாதம்

இன்று தமிழர்கள் மத்தியிலும், ஏனைய இந்திய மாநிலங்களிலும், ஸ்ரீ லங்கா போன்ற நாடுகளிலும் காணப்படும்

இறையியல் கல்லூரிகள் பெரும்பாலானவற்றில் தாராளவாதக் கொள்கைகளின் அடிப்படையிலேயே வருங்காலப் போதகர்களுக்கு வேத ஞானம் வழங்கப்படுகின்றது. வேதத்தை சந்தேகக் கண்ணோடு பார்ப்பதிலும், தங்களுடைய ஆன்மீக வாழ்விற்கு அழிவைத்தேடிக்கொள்வதிலும் மூன்று அல்லது நான்கு வருடங்களை வீணாக்கிக் கொள்ளும் அநேக இளம் வாலிபர்களை இவ்விறையியல் கல்லூரிகளில் காணலாம். இந்து மதத்தை ஒரு முக்கிய பாடமாகவும், பிற மதத்தினரோடு கலந்துரையாடல் செய்வதை ஒரு முக்கிய சுவிசேஷ முறையாகவும் பல கல்லூரிகள் போதித்து வருகின்றன. இதற்குச் சான்றாக தயானந்தன் பிரான்ஸிசின் “தமிழ்ச் சைவம்”, குலொஸ்டமாயரின் “கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ள இந்திய இறையியல்” ஆகிய நூல்களைக் கூறலாம். இன்றைய தமிழக, இந்திய இறையியல் சிந்தனைப் போக்கை இந்நூல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

மேலும், இக்கல்லூரிகள் வேதப்படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அமெரிக்காவின் மெக்காவரன் (Donald McGavran) ஏற்றுமதி செய்த சபை வளர்ச்சி முறைகளுக்கும் (Church Growth Principles) சமயசமரசக் கோட்பாட்டிற்கும் (Religious Syncretism) முக்கியத்துவம் கொடுத்து இறையியல் போதனைகளை அளிப்பதால் வருங்காலப் போதகர்கள் அத்தகைய கோட்பாடுகளின் அடிப்படையிலேயே போதக ஊழியத்தை ஆரம்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மெக்காவரனின் போதனைகள் நற்செய்தி ஊழியத்தில் சூழிசைவுக் கோட்பாட்டையும் (Contextualisation) வற்புறுத்துகிறது. இப்போதனை, நற்செய்தி ஊழியக்காரர் தாம் ஊழியம் செய்யும் மக்கள் மத்தியில் காணப்படும் கலாச்சாரம், சமூகசூழல் மற்றும் சமய நடவடிக்கைகளுக்கு ஒத்துப்போகும் விதத்தில் கிறிஸ்தவ போதனையை அளித்து சபை நிறுவ ஊக்குவிக்கிறது. மெக்காவரனின் போதனைகள் சூழிசைவுபடுத்தலைப் பெரிதும் வற்புறுத்துகிறது. இம்முறைகள் வேதத்தின் சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனிதநலவாதத்தின் (Humanism) அடிப்படையில் அமைந்த வழிகளின் மூலம் கர்த்தருக்கு ஆள் சேர்ப்பதையே தீவிரமாக

வலியுறுத்துகின்றன. வேதம், இவ்வாறான போதனைகளை அளிக்கவில்லை. அந்நிய மதங்களைப் பின்பற்றுவோர் மத்தியில் ஊழியம் செய்யும்போது, அவர்களுடைய பண்பாடு, பழக்க வழக்கங்களுக்கு நாம் மதிப்புக் கொடுத்து நடந்துகொள்ள வேண்டியது அவசியம்தான். அவர்கள் மத்தியில் வேதத்திற்கு எதிரானதாக அமையாத பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை அங்கீகரிக்க வேண்டியதும் அவசியமே (உதாரணம்: வீட்டிற்குள் நுழையுமுன் காலணியை வெளியில் வைத்தல், சாப்பிடும்போது கையால் உணவருந்துதல், கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவித்தல் போன்றவை). இதற்கு மேலாக எதையும் செய்யுமாறு வேதம் எதிர்பார்க்கவில்லை. ஆனால், மெக்காவரனின் போதனைகள் சூழிசைவுக் கோட்பாடு என்ற பெயரில் வேதம் அங்கீகரிக்காத அந்நிய மதப் பண்பாட்டு வழக்கங்களைப் பயன்படுத்தி நற்செய்தி ஊழியம் செய்வதை வலியுறுத்துகின்றன. உதாரணத்துக்கு, கிறிஸ்தவ பிரசங்கி காவி உடை தரித்துப் பிரசங்கிப்பது, இந்துக் கோவிலின் உருவத்தில் சபைக் கட்டிடத்தை அமைப்பது, வேதத்தை ஒதுக்கி வைத்துவிட்டு திருவாசகம், திருக்குறள்போன்ற நூல்களிலிருந்து பிரசங்கிப்பது போன்ற செயல்கள் எல்லாம் சமயசமரச சூழிசைவுபடுத்தும் கைங்கரியங்கள். இவற்றிற்கே இன்று இந்திய இறையியல் கல்லூரிகள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. இந்து மதத்தின் மூலமும், திராவிட சமயத்தின் மூலமும், அம்மதங்களை விட்டு விலகாமலேயே கிறிஸ்துவை அறிந்து கொள்ளலாம் என்ற போதனை இன்று சூடுபிடித்திருப்பதற்கு மெக்காவரன் போன்றோரின் போதனைகள் இறையியல் கல்லூரிகளையும், திருச்சபைகளையும் ஊடுருவியிருப்பதே காரணம்.

## தமிழ் கிறிஸ்தவ உலகின் சமயசமரச அணுகுமுறை

லிபரலிசம் மட்டுமல்லாது இன்றைய தமிழ் கிறிஸ்தவ உலகை சமயசமரசக் கோட்பாடும் (Ecumenism) பாதித்துள்ளது. ஐக்கியத்தின் பெயரில் எந்தவிதப் பாகுபாடும் காட்டாமல் கிறிஸ்தவ திருச்சபைகள், நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் போக்கு பரவலாகக் காணப்படுகின்றது. கிறிஸ்தவ

இறையியல் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது கிறிஸ்தவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, சுவிசேஷ ஊழியத்திற்கு இடைஞ்சலை உருவாக்கும் என்ற மனப்பான்மை தமிழ் கிறிஸ்தவர்கள் பெரும்பாலானோரின் இரத்தத்தில் ஊறிக்காணப்படும் ஒரு நம்பிக்கையாகும். அதன் காரணமாக இறையியல் கோட்பாடுகளுக்கு எந்த முக்கியத்துவமும் தராத சுவிசேஷ ஊழியப்பணியையே பெரும்பாலானோர் நடத்தி வருகிறார்கள்.

மேலைத் தேசங்களில் உருவாகித் தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு இறக்குமதி செய்யப்பட்ட லிபரலிசத்தைப்போன்ற இன்னுமொரு போலித்தனமான இறையியல் நம்பிக்கையே சமயசமரசக் கோட்பாடு ஆகும். இதை Religious Syncretism என்றும் அழைப்பார்கள். அடிப்படையில் தன் தன்மையில் ஒத்துப் போகாதவற்றை இணைப்பதே Syncretism. இந்த சித்துவேலையை ஆத்மீகக் காரியங்களில் செய்வதற்கு Religious Syncretism என்று பெயர். அடிப்படையில் வேறுபட்ட கத்தோலிக்க மதத்தை, வரலாற்று சுவிசேஷக் கிறிஸ்தவத்தோடு இணைத்துக் கணிக்கிறது Religious Syncretism.

தாராளவாதக் கோட்பாடு வேதத்தில் இருக்க வேண்டிய நம்பிக்கைக்கு ஊறு விளைவித்ததன் காரணமாக, இறையியல் போதனைகளற்ற ஒரு போலிச்சமயம் கிறிஸ்தவத்தின் பெயரில் உருவாகியதனால் நம்மினத்தில் சமயசமரசப் போக்கிற்கு எந்தத்தடையும் இருக்கவில்லை. வேதத்தில் நம்பிக்கை வைத்து இறையியல் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போதே சமயசமரசப் போக்கிற்கு ஆபத்து ஏற்படுகின்றது. தமிழ் கிறிஸ்தவ உலகின் அனைத்து சமயக்குழுக்களும், நிறுவனங்களும் இன்று சமயசமரசத்தை வற்புறுத்தி வருகின்றன.

இறையியல் போதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்றும், அவற்றை வலியுறுத்தி அவற்றின் அடிப்படையில் ஐக்கியத்தை நாடக்கூடாது என்றும், ஐக்கியத்திற்கு ஆபத்து விளைவிக்கும் எந்த இறையியல் கோட்பாட்டையும் சக கிறிஸ்தவர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது என்றும், வேதத்திலிருந்து ஐக்கியத்திற்குப் பங்கம் ஏற்படுத்தாத குறைந்தபட்ச போதனைகளின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள்

அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்றும் சமயசமரசக் கோட்பாடு வலியுறுத்தி வருகிறது.

ஏற்கனவே நாம் விளக்கிய மெக்காவரனின் திருச்சபை வளர்ச்சிக் கோட்பாடுகள் இத்தகைய சமயசமரசக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தவையே. இது ஒரு நாட்டின் மத, கலாச்சார நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் அடிப்படையில் சபைகளை அமைப்பதை வலியுறுத்துகிறதே தவிர வேதமாகிய திருமறைக்கோ அதன் அடிப்படைக் கோட்பாடுகளுக்கோ மதிப்பளிப்பதில்லை. ரோமன் கத்தோலிக்க சபை, லிபரலிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படும் சமயக்குழுக்கள், கெரிஸ்மெட்டிக், பெந்தகொஸ்தே ஊழியங்கள் அனைத்தையும் எந்தவித வேறுபாடுமின்றி கிறிஸ்தவ சபைகளாக ஏற்றுக்கொள்ளும் சமயசமரசப் போக்குடைய இக்கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இந்திய திருச்சபை வளர்ச்சி இயக்கமும் நடைபோடுகின்றது (Indian Church Growth Movement).

இத்தகைய போக்கு, கிறிஸ்தவ உலகு பாகுபாடின்றி எதையும் கிறிஸ்தவமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடன், அசத்தியத்தோடு உறவாடி ஐக்கியத்தில் வரச் சாதகமான ஒரு நிலைமையை ஏற்படுத்துவதில் எந்தவித ஆச்சரியமுமில்லை. இத்தகைய நிலைமையே இன்று தமிழ் கிறிஸ்தவ உலகத்தை வளைத்துப் பிடித்திருக்கின்றது என்பதை சிந்திக்கும் மனப்போக்குடைய எந்தவொரு கிறிஸ்தவனாலும் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. நாம் இதுவரைக் கவனித்துள்ள தாராளவாதக் கோட்பாடுகளும், சமயசமரசக் கோட்பாடுகளுமே தமிழ் கிறிஸ்தவ உலகம் இன்று இந்து மதத்தோடு உறவாடி அதில் கிறிஸ்துவைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை இருகரம் நீட்டி வரவேற்கும் பரிதாப நிலைமையைத் தோற்றுவித்துள்ளன.